வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி-23.9.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நியுயார்க்கில், ஐ நா பொதுப் பேரவைக் கூட்டத்தின் நிகழ்வுகளுக்கு இடையே வெளிநாட்டு தலைவர்களுடன் இருதரப்பு கூட்டங்களை நடத்தினார்.

**ஆயுஷ்மான் பாரத்- பிரதமரின் ஜன் ஆரோக்யா திட்டத்தின் கீழ் கடந்த 6 ஆண்டுகளில் சுமார் 8 கோடி பயனாளிகள் பணமற்ற முறையில் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர்.**

நாடு முழுவதும் 70 ஆயிரம் இடங்களில், மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் மையங்களை, அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய கனரக தொழில் துறை அமைச்சர் திரு எச் டி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் மத்திய திட்டங்களின் அமலாக்க நிலவரம் குறித்து மத்திய உள்துறை செயலர் திரு கோவிந்த மோகன் இன்று மாநில அரசு அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

மோடி-இருதரப்பு

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது அமெரிக்க பயணத்தின் 2-ஆம் நாளான இன்று நியுயார்க்கில், 79-ஆவது ஐ நா பொதுப் பேரவைக் கூட்டத்தின் நிகழ்வுகளுக்கு இடையே நேபாள பிரதமர், குவைத் பட்டத்து இளவரசர் மற்றும் பாலஸ்தீனிய அதிபருடன் இருதரப்பு கூட்டங்களை நடத்தினார்.

நேபாள பிரதமர் திரு கே பி சர்மா ஒலி-க்கும், பிரதமருக்கும் இடையிலான சந்திப்பின் போது இருநாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான உறவுகள் குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டது. நீர்மின்சாரம், போக்குவரத்து தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் தொடர்புகளில் இருநாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மை முன்னேறி வருவது குறித்து, இருதலைவர்களும் திருப்தி வெளியிட்டனர். சர்வதேச சோலார் கூட்டமைப்பின் 101-ஆவது உறுப்பினராக நேபாளம் சேர்ந்திருப்பது குறித்து, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்தார். அண்டை நாடுகளுக்கு முக்கியத் துவம் அளிப்பதான இந்தியாவின் கொள்கையில் நேபாளத்திற்கு முன்னுரிமை இருப்பதாகவும் அவர் கூறினார்.

குவைத் பட்டத்து இளவரசர் ஷேக் சபா காலேத் அல்-ஹமாத் அல்-சபாவைப் பிரதமர் சந்தித்த போது குவைத் உடனான உறவுகளுக்கு. இந்தியா மிகுந்த முக்கியத் துவம் அளிப்பதாக தெரிவித்தார். இருநாடுகளுக்கும் இடையில் வரலாற்று காலத்தில் இருந்தே உறவுகளும் மக்கள் நிலையிலான தொடர்புகளும் நிலவி வருவதை இரு தலைவர்களும் நினைவு கூர்ந்தனர். எரிசக்தி மற்றும் உணவு பாதுகாப்புத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில், இருநாடுகளும் ஒன்றுக்கு ஒன்று ஆதரவாக செயல்பட்டு வருவது குறித்து இருதலைவர்களும் திருப்தி வெளியிட்டனர். குவைத்தில் உள்ள இந்திய சமூகத்தினரின் நலன்களை உறுதிப்படுத்தி வரும் குவைத் பட்டத்து இளவரசருக்கு பிரதமர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பாலஸ்தீன அதிபர் திரு மஹ்முத் அப்பாஸ் உடனான இருதரப்புக் கூட்டத்தில் காசா பகுதியில் உருவாகி வரும் மனித நேய நெருக்கடி குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி ஆழ்ந்த கவலை வெளியிட்டார். மனிதாபிமான உதவிகள் உட்பட பாலஸ்தீன மக்களுக்கான இந்தியாவின் அசையாத ஆதரவு தொடரும் என்றும் அவர் உறுதி அளித்தார். போரை நிறுத்தி, பிணையக் கைதிகளை விடுவித்து பேச்சு வார்த்தைக்கு

திரும்பினால் தான், இஸ்ரேல்-பாலஸ்தீன பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை பிரதமர் மீண்டும் வலியுறுத்தினார். 2 நாடுகள் தீர்வு என்பது மட்டுமே பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையை கொண்டு வர முடியும் என்றும் அவர் கூறினார். பாலஸ்தீனத்தை முதலில் அங்கீகரித்த நாடுகளில் ஒன்று இந்தியா என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

*ஜன் ஆரோக்யா*

ஆயுஷ்மான் பாரத்-பிரதமரின் ஜன் ஆரோக்கியா திட்டம், இன்று 6 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த 2018-ஆம் ஆண்டில் இதே நாளில் தான், ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் இருந்து, இத்திட்டத்தை தொடக்கி வைத்தார். நாடு முழுவதும் சுமார் 55 கோடி பயனாளிகள் அடங்கிய, 12.37 கோடி குடும்பங்களுக்கு ஆண்டுக்கு தலா 5 லட்சம் ரூபாய் மதிப்பிலான 2-ஆம் நிலை மற்றும் 3-ஆம் நிலை மருத்துவ சிகிச்சை வசதிகளை வழங்கும் குறிக்கோளுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இம்மாபெரும் திட்டம் கடந்த 6 ஆண்டுகளில் பல லட்சம் பேருக்கு சென்று சேர்ந்துள்ளதாகவும், இதனால் இவர்களுக்கு, நம்பிக்கை முதல் உயிர் காக்கும் சிகிச்சை வரை பல்வேறு பலன்கள் கிடைத்திருப்பதாகவும் மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜேபி நட்டா சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மக்களின் உடல் நலத்தை மேம்படுத்தும் குறிக்கோளை எட்டுவதில் நாடே ஒருங்கிணைந்து செயல்படும்போது எதையெல்லாம் சாதிக்க முடியும் என்பதற்கு, இத்திட்டமே எடுத்துக் காட்டு என்றும், நலிவடைந்த பிரிவினர் உட்பட அனைத்து மக்களுக்கும் சமமான மருத்துவ சிகிச்சை கிடைக்கச்

செய்வதில் அரசுக்குள்ள உறுதிப்பாட்டின் வெளிப்பாடாக இத்திட்டம் அமைந்திருப்பதாகவும் அவர் கூறி உள்ளார்.

**ஆயுஷ்மான் பாரத்- பிரதமரின் ஜன் ஆரோக்யா** திட்டத்தின் கீழ் கடந்த 6 ஆண்டுகளில் சுமார் 8 கோடி பயனாளிகள் பணமற்ற முறையில் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். இதற்கென அரசு, சுமார் 1 லட்சத்து 7 ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டுள்ளது. நாடு முழுவதும் 13 ஆயிரம் தனியார் மருத்துவமனைகள் உட்பட, மொத்தம் 29 ஆயிரத்து 648 மருத்துவமனைகள், இத்திட்டத்திற்கான மருத்துவமனைகளாக பட்டியலிடப்பட்டுள்ளன. டெல்லி, ஒடிசா மற்றும் மேற்குவங்கம் அல்லாத நாட்டின் 33 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

**ஆயுஷ்மான் பாரத்- பிரதமரின் ஜன் ஆரோக்யா** திட்டப் பலன்கள் அண்மையில், பொருளாதார நிலை பற்றிய நிபந்தனை ஏதுமின்றி, 70 வயது அல்லது அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் அனைவருக்கும் நீட்டிக்கப் பட்டுள்ளன. இதனால் சுமார் 6 கோடி மூத்த குடிமக்கள் பயன் பெறுவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

*மின்சார வாகனம்*

நாடு முழுவதும் 70 ஆயிரம் இடங்களில், மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் மையங்களை, சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய கனரக தொழில் துறை அமைச்சர் திரு எச் டி குமாரசாமி தெரிவித்துள்ளார். இன்று குவஹாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் அசாம் மாநிலம் கார்பி அங்லாங் மாவட்டத்தில் இந்திய சிமெண்ட் கழகத்தின் போக்காஜான் ஆலைக்கு புத்துயிர் அளிக்க, அரசு 700 கோடி ரூபாய் செலவிடும் என்றார்.

எல் முருகன்

மீனவர் சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்து இருப்பதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார். இன்று தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தமிழகத்தின் மீன்பிடி படகுகளில் மொத்தம் 1 லட்சம் ஜிபிஎஸ் கருவிகளை நிறுவ, அரசு, 17 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதாக தெரிவித்தார். இலங்கை சிறைகளில் இருந்து, இந்திய மீனவர்களை மீட்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் கூறினார்.

புதுச்சேரி-கோவிந்த மோகன்

புதுச்சேரியில் மத்திய அரசின் ஆதரவுடன் கூடிய முக்கியத் திட்டங்களின் அமலாக்க நிலவரங்கள் குறித்து மத்திய உள்துறை செயலர் திரு கோவிந்த மோகன் இன்று தலைமைச் செயலகத்தில், பல்வேறு அரசுத் துறைகளைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தினார். புதுச்சேரியில் மத்திய திட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதையும் செயல்படாத திட்டங்கள் குறித்தும் அவர் கேட்டறிந்தார். புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. தொடர்ந்து சட்டமன்ற வளாகத்தில், முதலமைச்சர் திரு ரங்கசாமியை அவர் சந்தித்து, அதிகாரிகளுடன் தாம் நடத்திய ஆய்வுக் கூட்டம் குறித்து எடுத்துக் கூறினார். புதுச்சேரியின் வளர்ச்சிக்கான திட்டப் பணிகளில் நிலுவையில் உள்ள கோரிக்கைகள் குறித்து முதலமைச்சர் திரு ரங்கசாமி மத்திய உள்துறை செயலரிடம் மனு ஒன்றை அளித்து, கோரிக்கைகளை நிறைவேற்றக் கேட்டுக் கொண்டார். முன்னதாக மத்திய உள்துறை செயலர் ராஜ்நிவாசில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனை மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்புகளின் போது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலர் திரு அசுதோஷ் அக்னிகோத்ரி, புதுச்சேரி அரசின் தலைமைச் செயலர் திரு சரத்சவ்கான் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

*காரைக்கால்*

காரைக்காலில், வடகிழக்கு பருவமழை நிலவரங்களை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளதாக, காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு மணிகண்டன் தெரிவித்தள்ளார். இன்று காரைக்காலில் செய்தியாளர்களிடம் பேசிய அவரb தாழ்வான பகுதிகள் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், பேரிடர் மேலாண்மை துறையினர் மற்றும் தன்னார்வலர்கள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். காரைக்காலில் அமலாகி வரும் மக்களைத் தேடி மாவட்ட ஆட்சியர் திட்டம், மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாகவும் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் இத்திட்டத்தை பாராட்டி இருப்பதாகவும் அவர் கூறினார். மத்திய அரசின் அலிம்கோ நிறுவனம் காரைக்கால் மாவட்டத்தில் அலுவலகம் அமைத்து இருப்பதால் மாற்றுத் திறனாளிகளுக்கு தேவையான உபகரணங்கள் எளிதில் கிடைக்க ஏதுவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

*நூறு நாள்*

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் 3-ஆவது பதவிக் காலத்தில் முதல் 3 நாட்களிலேயே பெண்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தீன்தயாள் அன்னயோஜனா-தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், சுமார் 10 கோடி பெண்கள், 90 ஆயிரம் சுயஉதவிக் குழுக்களாக, ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர். 4.3 லட்சம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல் நிதியாக, மத்திய அரசு 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் விடுவித்துள்ளது. புதிதாக சுமார் 11 லட்சம் பெண்கள், லட்சாதிபதி சகோதரிகளாக பிரதமரிடம் சான்றிதழ் பெற்றுள்ளனர். இவ்வாண்டு மத்திய பட்ஜெட்டில், 3 லட்சம் கோடி ரூபாய் நிதி மகளிர் சக்திக்கான நலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கூடுதலாக 3 கோடி வீடுகள் பெண்களின் பெயரில் கட்டப்பட்டுள்ளதால் மகளிர் கண்ணியம் மேம்பட்டுள்ளது. மகளிர்

சக்தியை கொண்டாடும் வகையில் 2.35 லட்சம் மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 26 லட்சம் உறுப்பினர்களுக்கு மொத்தம் 5 ஆயிரம் கோடி ரூபாய் வங்கி கடன் வழங்கப்பட்டுள்ளது. முத்ரா கடன் மீதான 10 லட்சம் ரூபாய் உச்சவரம்பு 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதால் குறிப்பாக பெண் தொழில் முனைவோர் அதிகார மேம்பாடு பெற்றுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

*வானிலை*

மத்திய வங்க கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில், மத்திய மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டியப் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றும், நாளையும் வடதமிழகத்தில் ஓரிரு இடங்கள், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் ஓரிரு இடங்களில் மணிக்கு 40 கிலோமீட்டர் வரையிலான வேகத்தில் தரைக் காற்று வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 29-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

*ஆஸ்கார்*

திரைப்பட இயக்குநர் கிரண் ராவின் **லா பத்தா லேடீஸ்** நகைச் சுவை திரைப்படம், 2025-ஆம் ஆண்டு ஆஸ்கார் விருதுக்கான இந்தியாவின் அதிகாரப் பூர்வ போட்டித் திரைப்படமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சிறந்த வெளிநாட்டு திரைப்படங்கள் பிரிவுக்கான போட்டிக்கு இத்திரைப்படம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இந்திய திரைப்பட சம்மேளனம் தெரிவித்துள்ளது. அஸ்ஸாமி இயக்குநர் ஜானு பரூவா தலைமையிலான தெரிவுக் குழுவினால் இத்திரைப்படம் போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நியுயார்க்கில், ஐ நா பொதுப் பேரவைக் கூட்டத்தின் நிகழ்வுகளுக்கு இடையே வெளிநாட்டு தலைவர்களுடன் இருதரப்பு கூட்டங்களை நடத்தினார்.

**ஆயுஷ்மான் பாரத்- பிரதமரின் ஜன் ஆரோக்யா** திட்டத்தின் கீழ் கடந்த 6 ஆண்டுகளில் சுமார் 8 கோடி பயனாளிகள் பணமற்ற முறையில் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர்.

நாடு முழுவதும் 70 ஆயிரம் இடங்களில், மின்சார வாகனங்களுக்கான **சார்ஜிங்** மையங்களை, அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய கனரக தொழில் துறை அமைச்சர் திரு எச் டி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் மத்திய திட்டங்களின் அமலாக்க நிலவரம் குறித்து மத்திய உள்துறை செயலர் திரு கோவிந்த மோகன் இன்று மாநில அரசு அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது

-----------------------------